செ.வெ.எண்: 89/2017 நாள்: 01.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள், தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை இன்று (01.02.2017) தொடங்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் விவேகானந்தா கல்லூரி இணைந்து நடத்திய, தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை அகஸ்தீஸ்வரம், விவேகானந்தா கல்லூரியில் இன்று (01.02.2017) தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

10-ம் வகுப்பு பயிலும் போது மாணவ, மாணவியர்கள் தாங்கள் எதிர்காலத்தில் என்ன ஆக வேண்டுமென்று முடிவு செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால், 1970 முதல் 1980-ம் ஆண்டு வரை போட்டித்தேர்வுகள் மிக குறைவாக இருந்தது. ஆனால், இன்றைய காலத்தில் மக்கள் தொகை அதிகமானதால், அனைவர்களும் நன்கு படித்து வருகிறார்கள். ஆகவே மாணவ, மாணவியர்களிடம் போட்டிகள் அதிகரித்து கொண்டே வருகிறது. மேலும், 2013 முதல் 2016-ம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு தேர்வாணையமானது நான்கு அல்லது ஐந்து வருடத்திற்கு ஒருமுறை தான் தேர்வுகள் நடத்தினர். இப்போது, அந்த நிலையும் மாறி, ஒவ்வொரு ஆண்டும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்களாகிய நீங்கள், 18 வயது பூர்த்தியடைந்தவுடன், அனைத்து தேர்வுகளுக்கும் விண்ணப்பம் அளித்து, தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். இதே போன்று, தேர்வுகள் அனைத்திலும் பங்கு பெற்றால், நிச்சயமாக ஒரு தேர்வில் வெற்றி பெற முடியும்.

இன்றைய காலத்தில், அனைவருமே அரசு வேலைக்காக பல்வேறு போட்டித்தேர்வுகளில் கலந்து கொள்கிறார்கள். ஆனால், பணியிடங்களோ குறைவாக இருக்கிறது. எனவே, மாணவ, மாணவியர்கள் தேர்வுகளில் வெற்றி பெற முடியவில்லை என்றாலும், சுயதொழில் ஒன்றை தொடங்கி, அரசு வழங்கும் சலுகை திட்டத்தின் மூலம் பயன்பெற வேண்டும். மாணவ, மாணவியர்கள் தங்களை, தாங்களே போட்டியாளர்களாக கருதி கொண்டு, தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டும். விடாத முயற்சி இருந்தால், தேர்வுகள் மட்டுமல்ல, வாழ்வில் வெற்றிபெற முடியும் என தெரிவித்தார்.

பின்னர், மாதிரி பொதுத்தேர்வில் வெற்றிபெற்ற 4 (முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் 2 மாணவிகளுக்கு மூன்றாம் பரிசு) மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

முன்னதாக, மாணவ, மாணவியர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சியில் இடம் பெற்ற புத்தகங்களை தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு உதவி இயக்குநர் திரு. கி. செந்தில்குமார், கல்லூரி முதல்வர் முனைவர். பி. மாலரசு, கல்லூரி செயலாளர் திரு. சி.ராஜன், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வரலாற்று துறைத்தலைவர் (ஓய்வு) பேராசிரியர் திரு. ஜி.ஆல்பி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு. கே. மாரிமுத்து (முன்னாள் படைவீரர்) துணை இயக்குநர் (பொ) திரு. மா.சீனிவாசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. கே.பி.பிரம்மநாயகம், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. மோ.மணிகண்டன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.